பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 31 வெள்ளிக்கிழமை 16.08.2024 | அதிர்வு 014

## ஒற்றையாட்சியைப் பாதுகாக்க மொட்டுவை வெல்ல வையுங்கள்

### இப்படி நாமல் கோரிக்கை



"நாட்டின் ஒற்றையாட்சியை எம்மால் மாத்திரமே பாதுகாக்க முடியும். எனவே, 04▶



# நாட்டைப் பாதுகாக்க ஆணை தாருங்கள்!

## வேட்புமனுத் தாக்கல் செய்த பின் மக்களிடம் ரணில் வேண்டுகோள்



நாட்டுக்குள் புதிய பொருளாதாரமாற்றத்தைஏற்படுத்தத் தாம் ஆரம்பித்திருக்கும் வேலைத்திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்று, நாட்டில் அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்காக எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி மக்கள் ஆணையைப் பெற்றுத் தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார். 05▶

## ஓட்டோவில் பயணித்த மூவர் கோர விபத்தில் உயிரிழப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திவுலப்பிட்டி – நீர்கொழும்பு வீதியில் துனகஹா சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

கொதிகமுவ – துனகஹா வீதியில் திவுலப்பிட்டி நோக்கி அதிவேகமாகப் பயணித்த ஓட்டோ வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், திவுலப்பிட்டியில் இருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓட்டோவில் பயணித்த ஆண்கள் இருவர் சம்பவ இடத்திலேயே 04▶





இன்னும் 37 நாள்களில் ஜனாதிபதித் தேர்தல்.

பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும் சட்டமூலம் திட்டமிட்டபடி வரும் மூன்றாம் திகதி நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விடும். போதாக்குறைக்கு ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு நாடாளுமன்றம் கலைக்கப்படும் சாத்தியங்களும் உண்டு.

ஆக, ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு பொதுத் தேர்தல், 05▶




# தேர்தல் தொடர்பில் 408 முறைப்பாடுகள்

2024 ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 408 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் குறித்து அறிவிக்கப்பட்ட தினம் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் பதிவானவற்றில் வன்முறை சம்பவமொன்றும் தேர்தல் சட்டத்தை மீறிய 392 முறைப்பாடுகளும் அடங்குகின்றன.

எவ்வாறாயினும் இம்முறை ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து வேட்புமனு தாக்கல் செய்யும் நாள் வரையிலான காலப்பகுதிக்குள் பதிவாகும் தேர்தல் வன்முறைகளின் எண்ணிக்கையானது கடந்த ஜனாதிபதிதேர்தலுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலேயே காணப்படுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.




# தேர்தல் அச்சுப்பணிகள் இன்று முதல் ஆரம்பம்

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய அச்சுப்பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

நேற்று வேட்புமனு தாக்கல் நிறைவடைந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததன் பின்னர் அச்சுப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் நேற்றுத் தெரிவித்திருந்தார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், 2019ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இடம்பெறாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.





# நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தேசிய மக்கள் சக்தி தீர்வு வழங்கும்

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்குத் தேசிய மக்கள் சக்தியே தீர்வு வழங்கும் எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டில் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், ஆட்சியமைத்தல், ஆட்சியைக் கலைத்தல் மற்றும் கட்சித் தாவல்கள் என்பன கடந்த 76 வருடங்களாக இடம்பெற்று வருகின்றன.

மக்களும் நாடும் பல துன்பங்களை எதிர்நோக்கியமையே இறுதி விளைவாக அமைந்துள்ளது.

இவற்றிலிருந்து மீள்வதற்கு இந்தத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மக்களுக்கு ஒரு மாற்றம் தேவை, அந்த மாற்றம்தான் தேசிய மக்கள் சக்தி, எமக்கு நிச்சயமாக வெற்றியடைய முடியும்.

நாட்டில் உள்ள முறையற்ற அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்க வேண்டும். அவ்வாறானால் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களியுங்கள்." – என்றார்.





# யாழில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினருக்கு அஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த இந்தியப் படையினரின் நினைவாக பலாலி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினத்தையொட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டிலிருந்து 1990 வரை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

இந்த மோதல்களில் உயிரிழந்த இந்தியப் படையினர் நினைவாக பலாலி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி நேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் யாழ். இராணுவ தலைமையகத்தின் இராணுவ உயர் அதிகாரிகள், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரங்கத்தின் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் கலந்துகொண்டனர்.

## ஒற்றையாட்சியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வெற்றியடையச் செய்யுங்கள்.” – என்று அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று வேட்புமனுவைச் சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“நபர்களை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் செயற்படவில்லை. நாங்கள் கொள்கைகளை முன்னிலைப்படுத்திச் செயற்படுகின்றோம். அரசியலில் நண்பரும் இல்லை எதிரியும் இல்லை என்பார்கள். ஆகவே, எம்மை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணைவார்கள்.” – என்றும் அவர் மேலும் கூறினார்.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்பாக ஒன்றுகூடி நாமல் ராஜபக்ஷவை வரவேற்றார்கள். பட்டாசு கொளுத்தி தமது ஆதரவை வெளிப்படுத்தினார்கள்.

## ஓட்டோவில் பயணித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர்.

அந்த ஓட்டோவில் பயணித்த வேளை பலத்த காயமடைந்த ஒரு பெண்ணும் மற்றுமொரு ஆணும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அந்த ஆணும் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் 30, 38 மற்றும் 45 வயதுடைய கொதிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த பெண் மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபை தேர்தல் ஆகிய இரண்டும் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

இதுதான், இப்போது மொட்டு கட்சியிலிருந்து ஜனாதிபதி ரணிலின் பக்கம் பாய்ந்திருக்கும் எம்.பிக்களின் வயிற்றைக் கலக்கும் பிரச்சினையாகியிருக்கின்றது.

இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வென்றாலும் சரி, தோற்றாலும் சரி, தாங்கள் அதன்பின் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தத்தமது இடங்களில் தேர்தலுக்கு முகம் கொடுத்து வெல்லவே முடியாது என்பது இந்த பழைய மொட்டு கட்சியினருக்கு நன்கு தெரியும். ஐ.தே.கட்சியின் பெயர் அவ்வளவு தூரம் ரிப்பேராகி இருக்கின்றது என்பது அவர்களுக்கு நன்கு புரியும்.

தங்களுக்கு மட்டுமல்ல, தத்தமது பிரதேசங்களில் உள்ள தங்களின் நெருங்கிய ஆதரவாளர்கள், உற்றார், உறவினர்களுக்கும் மாகாண சபையில் இடம் கொடுத்தாக வேண்டும். அதற்கு ஐ.தே.கட்சி என்ற மண்குதிரையில் ஏறிப் பயனில்லை என்பதும் அவர்களுக்கு நன்கு விளங்கிய விடயம்தான். அதேசமயம், பொறுத்த சமயத்தில் கால்வாரிக் கைவிட்ட தங்களை மொட்டுக் கட்சி இனிக் கிட்டவும் எடுக்காது என்பதும் அவர்களுக்கு புரிந்த விடயம் தான்.

அதனால்தான் ஜனாதிபதி ரணில் பக்கம் பாய்ந்த மொட்டுத் தரப்பினர் எல்லோரும் சேர்ந்து அவசர அவசரமாக ஒரு புதுக் கட்சியைக் கட்டமைப்பதில் சிரத்தை காட்டுகிறார்கள்.

2017-இல் இப்படித்தான் மொட்டுக் கட்சியை பஸில் ராஜபக்ஷ - பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இணை ஆரம்பத்தில் இருந்து கட்டி எழுப்பியது. அதைப் பார்த்து 'கான மயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாக ஆட முயன்ற மாதிரி', இப்போது மொட்டுவில் இருந்து ரணில் பக்கம் பாய்ந்தோடியவர்கள் புதுக் கட்சித் திருவிழாவை ஆரம்பித்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

உத்தேச புதுக் கட்சியின் செயலாளராக சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரண செயற்படுவார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மொட்டு அதிருப்தியாளர்களின் புதுக் கட்சி முளைவிட்டுக் கிளம்புமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

\+ \+ \+

தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் 'சங்கே முழங்கு'என்று களத்தில் இறங்கி விட்டார். ஆனால் அவர் இது வரை காலமும் இருந்த தமிழரசு கட்சியில் அவருக்கு சங்கு ஊதும் வேலை நடக்கின்றது. கட்சியின் அனுமதியின்றி வேட்பாளராகக் களமிறங்கியமை தொடர்பில் விளக்கம் கேட்டு, கட்சியின் பொதுச்செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் அவருக்கு நேற்று முன்தினம் கடிதம் அனுப்பி வைத்திருக்கின்றார். இரண்டு வார காலம் விளக்கம் அளிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. கட்சி உறுப்புரிமையை அவர் இழக்க வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதற்கிடையில் தென் இலங்கையில் இருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரான சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் தமது முகப்புத்தகத்தில் 'கிழக்கில் தமிழ் விக்கெட் ஒன்று காஸ் சிலிண்டர் பக்கம் சரிகிறது' என்று எழுதி இருக்கின்றார். அவருக்கு கிடைத்த தகவலின்படி பொது வேட்பாளர் தரப்பின் ஐந்து விக்கெட்டில் ஒன்றுதான் அவுட் ஆகப்போகின்றது. அதுவும் சங்கூதும் வேலைதான்..!

காற்றுள்ள போது தூற்றிக் கொள்பவன் புத்திசாலி. அடுத்த தடவை எம்.பி. பதவி சாத்தியம் இல்லை என்றால், இப்போது இருக்கும் போதே பிழைத்துக் கொள்ளலாம் என்று குவித்து கொள்ளத் தீர்மானித்து இருப்பார். அதுதான் ஜனநாயகம் போல...!

## நாட்டைப் பாதுகாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக் குழுவில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் அங்கு கூடியிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தலை நடத்துவது ஒருபுறமிருக்க, அரசைக் கூடக் கொண்டு செல்ல முடியாது எனச் சிலர் கூறிய போது, இரண்டு வருடங்களுக்குள் நாட்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் நிலைக்குக் கொண்டு வந்த தன்னிடம், இனிவரும் காலங்களிலும் நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்வதற்கான வலு இருக்கின்றது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்க முன்வராத தலைவர்களிடம் நாட்டை ஒப்படைப்பது பொருத்தமானதாக அமையுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி, அன்று பற்றி எரிந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தான் முன்வந்திருக்காவிட்டால் இன்றைய பங்களாதேஷின் நிலைமையை அன்றே இலங்கை சந்தித்திருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்துப் பொருளாதாரத்தையும் பலப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்தும் நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்த தனக்கு, ஆதரவளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள், அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள், முப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கும், எம்.பிக்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். நான் நாட்டைப் பொறுப்பேற்ற 2022 ஜூலை மாதத்தில் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி அலுவலகம் அலரி மாளிகை, பிரதமர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டதுடன் எனது வீட்டுக்கும் தீவைக்கப்பட்டது.

அப்போது, தேர்தலை நடத்துவது ஒருபுறமிருக்க, ஆட்சியைக் கொண்டு நடத்துவதும் சாத்தியமற்றது என்று பலர் நினைத்தனர். ஆனால், சபாநாயகர் உட்பட நான் நாடாளுமன்றத்தை முற்றுகையிட அனுமதிக்கவில்லை. பின்னர் அந்த நாடாளுமன்றம் என்னை ஜனாதிபதியாக நியமித்தது. இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து அன்றைய தினம் நாடாளுமன்றத்தைப் பாதுகாத்தனர். இல்லையேல் இன்றைய பங்களாதேஷைப் போன்ற நிலைமையை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

எரிந்து கொண்டிருந்த நாட்டில் அந்த நிலைமையைத் தடுத்து இன்று நாட்டை முன்னோக்கிக் கொண்டு வந்துள்ளோம். அழிவைத் தடுக்க எதிர்க்கட்சிகள் எவரும் ஆதரவு வழங்கவில்லை. அரசைப் பதவி விலகச் சொல்லிவிட்டு அவர்களும் ஓடி விட்டனர். அரசுக்குப் புண்ணியமாகப் போக, இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. அத்தகையவர்கள் ஆட்சியைப் பெறுவதற்குத் தகுதியானவர்களா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அவர்களிடம் நாட்டின் ஜனநாயகத்தை ஒப்படைக்க முடியுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

அன்று எரிபொருள் வரிசைகள் இருந்த நாட்டில் இன்று எரிபொருள் வரிசைகள் இல்லை. உணவுக்கும் மருந்துக்கும் வரிசைகள் இருந்த நாட்டில் இன்று அந்த வரிசைகள் இல்லை. இப்போது மக்கள் கையில் பணம் இருக்கின்றது. இப்போது மக்கள் வாழக்கூடிய நாடு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் மக்களின் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. அதற்காக நான் வருந்துகின்றேன்.

இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் ஓடிவிட்டனர். பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க யாரும் முன்வரவில்லை. ஆனால், இன்று இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டை முன்னேற்றியுள்ளோம். நாடு வங்குரோத்தாகும் முன்பும் கூட மக்களுக்கு வழங்கப்படாத நிவாரணத்தை, வங்குரோத்தடைந்த காலத்தில் மக்களுக்கு வழங்கியுள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குஅஸ்வெசுமமற்றும்உறுமயவேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. மேலும், கடந்த ஜனவரி மாதம் அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டு ஜனவரியில் மேலும் பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் ரூபாவால் அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். நடுத்தர மக்களின் வரிச்சுமையை குறைக்கும் திட்டமும் எம்மிடம் உள்ளது. மேலும், அரச தொழில்வாய்ப்புகள் வழங்கும் பணிகளும் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். தனியார் துறையிலும் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் கட்டியெழுப்பப்பட்டு வரும் பொருளாதாரத்தை நாம் அனைவரும் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு தொடரப்பட்டு இந்நாட்டு மக்களை வளப்படுத்தக் கூடிய புதிய பொருளாதாரம் நாட்டில் உருவாக்கப்படும்.

இன்று நாம் ஆரம்பித்துள்ள இந்த வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இந்நாட்டு மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி எனக்கு மக்கள் ஆணையை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். நாட்டில் புதிய பொருளாதார மாற்றம் ஏற்படுத்தப்பட்டு இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலம் கட்டியெழுப்பப்படும்." - என்றார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தரப்பினர்கள் உட்பட ஏராளமான ஆதரவாளர்கள் இதன் போது கலந்துகொண்டனர்.

## நமது கருத்து

# தொ(ல்)லைபேசிகள்!

நாட்டில் பாடசாலை மாணவர்கள் ஒரு நாளைக்கு 2 மணி நேரத்திற்கும் மேலாக கைத்தொலைபேசி, மடிக் கணினி போன்ற மின்னணு சாதனங்களில் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காகச் செலவிடுகின்றனர் என்பது ஓர் உள்ளூர் ஆய்வில் தெரியவந்துள்ளது. காலி மாவட்டத்தில் தரம் 7 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளதாக காலி மாவட்ட சமூக நிபுணர் வைத்தியர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகி உள்ளனர் என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள் குழுவொன்று இந்த ஆய்வை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி மேலும் தெரிவித்துள்ளார்.

இப்படித் தொலைபேசிகளுக்கு அடிமையான பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருக்கின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இன்றைய மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளையும் மறந்து தொலைபேசியின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. தொலைபேசியின் ஆக்கிரமிப்பிற்குள் மூழ்கிக் கிடக்கும் மாணவர்கள் அதனால் தங்களைச் சுற்றி நடக்கும் விடயங்களில் பிரக்ஞையற்றவர்களாக - எந்த சிந்தனையும் அற்றவர்களாக - காணப்படுகின்றனர். அவர்கள் கற்றலில் முழு ஈடுபாடு காட்டுவதில்லை. மாறாக தொலைபேசி விளையாட்டுக்கள், முகபுத்தகங்களின் பாவனை என்பவற்றில் நேரத்தை அவமே செலவிடுகின்றனர்.

தொலைபேசி விளையாட்டு மீதான இவர்களின் ஈடுபாடு உணவு, உறக்கம், கல்வி என்பவற்றை மறக்கடிக்கும் அளவில் எல்லை மீறிக் காணப்படுவதாகவும் சுட்டப்படுகின்றது. சில நேரங்களில் பாடசாலைக்குக் கூட செல்லாமல் தொலைபேசி விளையாட்டுக்களில் நேரத்தைச் செலவிடுகின்றனர் எனவும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், கையடக்க தொலைபேசிளுக்கு அடிமையான சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக தெரிய வந்துள்ளது.

கையடக்க தொலைபேசிளுக்கு அடிமையான மனப்பாதிப்பினால் சமூகக் கட்டமைப்பு மற்றும் சமுதாய விழுமியங்களிலிருந்தும் குடும்ப அரவணைப்பிலிருந்தும் விலகிச் செல்லும் சிறுவர்கள், அதனால் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்கின்றனர் எனவும் பல சமயங்களில் பெற்றோர்களால் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது என்றும் சுட்டப்படுகின்றது.

2020ஆம்ஆண்டு ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, பாடசாலைகளுக்குச் சென்று கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலைமைக்கு, சிறுவர்கள் இலக்காகினர். மேலும், அந்தக் காலப்பகுதியில், இந்நாட்டின் கல்வி முறையில் ஒரு பெரிய மாற்றமும் ஏற்பட்டது. குறிப்பிட்ட சில வருடங்களுக்கு, பாடசாலைக் கல்வி நடைமுறைகள் அனைத்து, ஒன்லைன் முறைமைக்கு மாற்றப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில், கல்வி நோக்கங்களுக்காக கைத்தொலைபேசி மற்றும் கணினிகளைப் பயன்படுத்துவது, சிறுவர்களுக்கு இன்றியமையாததாகி விட்டது. மேலும், பல சிறுவர்கள், இணையம் மற்றும் பல்வேறு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தவும் ஊக்குவிக்கப்பட்டனர்.

இவ்வாறான பின்னணியில், அலைபேசிக்கு அடிமையாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இலங்கையில் கிட்டத்தட்ட 10 இலட்சம் சிறுவர்கள், மொபைல் தொலைபேசிகளுக்கு அடிமைகளாகியுள்ளனர் எனக் குழந்தை உளவியலாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறாக, அலைபேசிக்கு அடிமையாகியுள்ள சிறுவர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு, பெற்றோர்களிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்படுவதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# முதல்வர் மருந்தகம், காக்கும் கரங்கள் திட்டம் சுதந்திர தின உரையில் ஸ்டாலின் அறிவிப்பு



“குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கும் ‘முதல்வர் மருந்தகம்’ அமைக்கப்படும், முன்னாள் இராணுவ வீரர்கள் தொழில் தொடங்க 1 கோடி ரூபா வரை கடனுதவி வழங்க வகை செய்யும் ‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ திட்டம் தொடங்கப்படும்.”

– இவ்வாறு சுதந்திர தின உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டார்.

இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று சென்னை – புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றினார். முன்னதாக, காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார் முதல்வர் ஸ்டாலின். கொடி வணக்கம் செலுத்திய பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டு மக்கள் அனைவருக்கும் விடுதலை நாள் வாழ்த்துகள். சுதந்திரத்துக்காக போராடியவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற உறுதி ஏற்போம். நம் நாட்டின் நீண்ட விடுதலை போராட்டத்தில் பங்கு கொண்ட விடுதலை போராட்ட தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவோம். அவர்களை இந்த அரசு போற்றுகிறது. பன்முகத்தன்மையின் அடையாளம் தேசியக் கொடி.

இந்தியாவில் பிற மாநிலங்களை காட்டிலும் தியாகிகளை போற்றுவதில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. முதல்வர்கள் கொடியேற்றும் அதிகாரத்தை பெற்றுத் தந்தவர் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி. சமூக மாற்றத்தை நோக்கி திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. அதன்படி சமூக வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஏழை, எளிய, நடுத்தர மக்களின் தேவைகளை உணர்ந்து, அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே அவற்றை நிறைவேற்றித் தரும் அரசாக விளங்கி வருகிறது. நான் தொடர்ந்து மேற்கொண்டு வரும் கள ஆய்வுகள் மற்றும் மக்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில், உங்களது திராவிட மாடல் அரசின் சார்பாக இந்த வீர விடுதலைத் திருநாளில் சில அறிவிப்புகளை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை எளியோருக்கு, சிறப்பான சிகிச்சைகளும் தரமான மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நடுத்தரக் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்குத் தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதால், இவர்களுக்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வாக, பொதுப்பெயர் வகை (ஜெனரிக்) மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் இவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், முதல்வர் மருந்தகம் என்ற புதிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். வரும் பொங்கல் திருநாள் முதல் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும். இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, மருந்தாளுநர்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேவையான கடனுதவியோடு மூன்று லட்சம் ரூபாய் மானிய உதவியாக அரசால் வழங்கப்படும்.

தாய்நாட்டிற்காகத் தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களது பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்திடவும். வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், ‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில், 30 விழுக்காடு மூலதன மானியமும். 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும். இவர்களுக்குத் திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற தேவையான பயிற்சிகளும் அரசால் வழங்கப்படும். இராணுவப் பணியின்போது உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 400 முன்னாள் இராணுவத்தினர் பயன்பெறும் வகையில், 400 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களுக்கு ஏறத்தாழ 120 கோடி ரூபா முதலீட்டு மானியம் மற்றும் 3 விழுக்காடு வட்டி மானியம் சேர்த்து வழங்கப்படும்.

மாநில அரசு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தற்போது வழங்கிவரும் மாதாந்திர ஓய்வூதியம் 20 ஆயிரம் ரூபா என்பது 21 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். விடுதலைப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு அரசு தற்போது வழங்கிவரும் மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியமான 11 ஆயிரம் ரூபா, 11 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கை மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, வ.உ. சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்கள் பெற்றுவரும் மாதாந்திரச் சிறப்பு ஓய்வூதியமான 10 ஆயிரம் ரூபாய் என்பது இனி 10 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.”– என்றார்.

# ஆளுநர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்து வைத்தார்: முதல்வர் ஸ்டாலின், அமைச்சர்கள் பங்கேற்பு!

சுதந்திர தினத்தையொட்டி சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடந்த தேநீர் விருந்தில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார்.

அவருடன் சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தின விழா கொண்டாடப்படும் போது விடுதலைப் போராட்ட வீரர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், பொது பிரமுகர்களுக்கு தேநீர் விருந்து வழங்குவது ஆளுநரின் வழக்கமான நடவடிக்கையாகும். அதன்படி சுதந்திர தின விழாவையொட்டி, பல்வேறு அரசியல் கட்சியினருக்கும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால, இந்த தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக காங்கிரஸ், வி.சி.க. உள்ளிட்ட தி.மு.கவின் கூட்டணிக் கட்சிகள் அறிவித்திருந்தன.

இந்த நிலையில், சுதந்திர தின விழா கொடியேற்றத்துக்குப் பின்னர், சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தி




யாளர்களைச் சந்தித்த தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு,

“ஆளுநருடைய கருத்தியல் சார்ந்திருக்கக் கூடிய விஷயங்களில் மாறுபட்ட கருத்துகள் தி.மு.கவுக்கு இருக்கிறது. ஆனால், ஆளுநர் என்கிற அந்தப் பதவியின் மீதும், அந்தப் பொறுப்பின் மீதும் முதல்வர் பெரும் மதிப்பு கொண்டிருக்கிறார். எனவே, அந்த கோட்பாடுகளின் அடிப்படையில், ஆளுநருடைய அழைப்பினை ஏற்று தேநீர் விருந்தில் நாங்கள் கலந்து கொள்கிறோம்.” – என்று கூறியிருந்தார்.





# கொரோனா தொற்றுக்குப் பின்னர் எல்லைகளை திறக்கும் வட கொரியா

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிக்காக அதன் எல்லைகளைத் திறப்பதற்கு வட கொரியா தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் அதன் எல்லைகளைத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்று பரவல் காரணமாக சுமார் ஐந்து வருடங்களாக வடகொரியா சுற்றுலாப்பயணிகளுக்காகத் தமது எல்லைகளை மூடியிருந்தது.

இந்தநிலையில், தென்கொரியா சுற்றுலாப் பயணிகளைத் தவிர ஏனைய நாட்டுச் சுற்றுலாப்பயணிகளுக்கு வடகொரியாவிற்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எல்லை மூடல் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியையும் பாரியளவில் பாதித்திருந்தது.

நாட்டின் அணுசக்தித் திட்டம் காரணமாகச் சர்வதேச நாடுகள் தடைகளை ஏற்படுத்தியிருந்தன.

இதன் காரணமாக, உணவு தட்டுப்பாடு உச்சத்தை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமி எச்சரிக்கையை தளர்த்திய ஜப்பான்

ஜப்பானில் தொடர்ச்சியாக பதிவாகிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்நாட்டு அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கை தளர்த்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜப்பானின் தென் பகுதியில் உள்ள கியூஷு தீவு அருகே 7.1 ரிக்டர் மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு பதிவாகியிருந்தது.

இதன்காரணமாக ஜப்பானின் வர்த்தக நடவடிக்கைகள் தடைப்பட்டதுடன், சுற்றுலாத்துறையும் பாரியளவில் பாதிக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் தொடர்ச்சியாகப் பதிவாகும் நில அதிர்வு குறித்து ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மீண்டும் பாரிய நிலநடுக்கம் பதிவாவதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதாக



அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, விடுக்கப்பட்டிருந்த சுனாமி எச்சரிக்கையும் தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச்சூடு; ஊரடங்கு அமுல்







அமெரிக்காவில் ரிச்மண்ட் பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 4 பேர் காயமடைந்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் என 4 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 2 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# டீச்சருக்கு டார்ச்சர் நான்கு பேர் கைது!

## உடப்புஸ்ஸலாவையில் சம்பவம்

(ஆ.ரமேஸ்)

பதுளை மாவட்டம் வெலிமடை கல்வி பணிமனைக்குட்பட்ட உடப்புஸ்ஸலாவை அலக்கொலை தமிழ் வித்தியாலயத்தில் பணியாற்றும் டெல்மார் தோட்டத்தை சேர்ந்த ஆசிரியை ஒருவர் கடமை நேரத்தில் தாக்குதலுக்கு இலக்காகியமை தொடர்பில் இதே பாடசாலையில் கடமையாற்றும் உப அதிபர் உட்பட நால்வர் ஊவாபரணகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது சம்பவம் நேற்று இடம்பெற்றதாக ஊவா பரணகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஆசிரியை மீதான இந்த தாக்குதலில் அவர் பணியாற்றும் வித்தியாலயத்தில் அதிபர் உள்ளிட்ட அவருக்கு தேவையான ஆசிரியர்கள் ஈடுப்பட்டனர் எனத் தாக்குதலுக்கு உள்ளான ஆசிரியை ஊவா பரணகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் 13 ஆம் திகதி செவ்வாய் கிழமை இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் தாக்குதலுக்கு உள்ளான ஆசிரியை உடப்புஸலாவை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-


கடந்த ஐந்து வருடங்களாக குறித்த பாடசாலையில் கடமையாற்றி வரும் இந்த ஆசிரியைக்கு சுமார் ஒன்றரை ஆண்டுகளாக மாணவர்களுக்கு கற்பிக்கப் பாட நேர சூசி வழங்கப்படவில்லை. கற்றல் - கற்பித்தல் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் அவர் பாடசாலை அதிபரால் அவர் ஓரங்கட்டப்பட்டுள்ளார்.

அதேநேரத்தில் பாடசாலையில் ஆசிரியராக புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ள அதிபரின் மகனுக்கு கூடுதலான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலையில் மேலதிக ஆசிரியர்கள் சேவையில் உள்ளனர் எனக் கூறி பாடசாலை அதிபர் மெற்படி ஆசிரியையை இடம்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அத்துமீறிய இடமாற்றத்தை கண்டித்து அந்த ஆசிரியை கல்வி திணைக்களத்தின் மேலதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளதுடன் தனக்கு நேர்ந்தவற்றைத் தெரிவித்துள்ளார்.

ஆனால் நாளுக்கு நாள் பாடசாலை அதிபரின் செயற்பாட்டை தாங்கக்கூடிய முடியாத ஆசிரியை அத்துமீறிய இடமாற்றத்தை தடுக்க சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் வழக்கு தொடர்ந்து இடமாற்றத்தை தடை உத்தரவையும் பெற்றுள்ளார்.



Acknowledgement of Complaint

Police Station
Date 24.08.13
Name of Complainant A. ...
Nature of Complaint
I. B. Reference
Signature of Recording Officer
Name Rank & Reg. No. of Recording Officer



இவ்வாறான செயற்பாடினால் ஆத்திரம் கொண்ட அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் என நால்வர் ஆசியையை பழிவாங்கும் விதத்தில் ஆசிரியைக்கு பாடங்கள் கற்பிக்க இடம் கொடுக்காதும் பாடசாலை வகுப்பறையில் அமருவதற்கும் கூட இடம் கொடுக்காது 'டாச்சர்' கொடுத்துள்ளார்.

இது விடயமாக குறித்த ஆசிரியை பாடசாலை அதிபரிடம் வினவியபோது ஆத்திரம் கொண்ட அதிபர் அவருக்கு தேவையான ஆசிரியர்களை வரவழைத்து ஆசிரியையைத் தாக்கியுள்ளமையுடன் பாடசாலை அறை ஒன்றில் சிறை வைத்தனர் எனவும் ஆசிரியை பொலிஸாருக்கு முறையிட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கை எடுத்து பொலிஸார் இந்த தாக்குதலை நடத்திய நால்வரை கைது செய்து விசாரணைகளின் பின் வெலிமடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் உள்ளனர் எனத் தெரிவித்தனர்.



# ரணிலை ஆதரிக்கும் வேலுகுமாரின் முடிவுக்கு கண்டி மாவட்ட புத்திஜீவிகள் அமோக வரவேற்பு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் எடுத்துள்ள தீர்மானத்தை கண்டி மாவட்ட தமிழ் சிவில் பிரதிநிதிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும் வரவேற்றுள்ளனர்.

கண்டி வரலாற்றில் ஒரு தமிழராக இரு தடவைகள் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்து அரசியல் சாதனை படைத்துள்ள வேலுகுமாரின், அரசியல் பயணம் மக்களுக்கானது என்பதால் அவருக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மலையக மறுமலர்ச்சிக்காக ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் காலத்தின் கட்டாய தேவையென்பதால், அவற்றைத் தொடர்வதற்கு வேலுகுமார் எடுத்துள்ள முடிவு சிறந்தது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# நோர்வூட்டில் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய ஏழு தொழிலாளர்கள்!

## சிகிச்சைக்கு வைத்தியசாலையில் அனுமதி







(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ் பிரிவு தோட்ட தேயிலை மலையில் தேயிலை பறித்து கொண்டிருந்த 07தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று வியாக்கிழமை மாலை 05மணியளவில் இடம் பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ்ப்பிரிவு தோட்ட தேயிலை மலையில் மரம் ஒன்றில் இருந்த குளவிக் கூடு கலைந்து வந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

காயங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் 07பேரும் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவகின்றனர் எனவும் அவர்களின் நிலைமை குறித்த அச்சமடையத் தேவையில்லை எனவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்



# தொழில் வாய்ப்புக்கள் ஊக்குவிக்கப்படும்

## நாமல் கூறுகின்றார்

நாட்டிற்குப் பொருத்தமான பொருளாதார, சமூக மாற்றங்களைக் கொண்டுவர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியடையும் அரசியல் கட்சியாகும்.

தொழில் வாய்ப்பு, கைத்தொழிலைப் பெருக்கி நாட்டில் உள்ள அனைவரையும் பாதுகாக்க முடியுமான பரந்த கூட்டணியாக எமது கட்சி முன்னிலையாகிறது.

எமது கட்சிக்குள் மக்கள் மாறவில்லை. மக்களின் பிரதிநிதிகளே மாறுகின்றனர்.

நாம் எமது நோக்கத்தை மக்களிடம் முன்வைப்போம். மக்களே அவர்களது முடிவுகளை எடுப்பர்.”– என்றார்.












# அரசியல் நலனிற்காக கட்சி தாவுபவர்கள் தங்கள் கட்சியில் இல்லை என்கிறார் சஜித்

“எனது அரசியல் அணியில் உள்ளவர்கள் அரசியல் நலனிற்காக கட்சித்தாவலில் ஈடுபடாதவர்கள். எனது அணியில் உள்ளவர்கள் மதுபானசாலை அனுமதிப்பத்திரம், காணி உறுதிப்பத்திரம்,பணம் போன்றவற்றிற்காக கட்சிதாவாதவர்கள்.”

– இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வேட்புமனுவைத் தாக்கல் செய்ய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முகத்துவாரம் விஷ்ணு ஆலயத்திற்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

“நாட்டில் உள்ள சகல பிரஜைகளும், எதிர்வரும் தேர்தலில் முடிவுகளை மேற்கொள்ளும்போது, நாடு வீழ்ந்துள்ள நிலைமையிலிருந்து மீட்கக்கூடிய ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு வாக்களிப்பார்கள் என நாம் எதிர்பார்கின்றோம். அதில் எவ்வித ஐயமும் இல்லை.

எமது கூட்டணியுடன் உள்ளவர்கள் மதுபானசாலை உரிமங்கள், வரப்பிரசாதங்கள் மற்றும் பணத்திற்காகக் கட்சித் தாவமாட்டார்கள்.

அவ்வாறு வருபவர்களை நாம் ஒருபோதும், ஏற்றுக் கொள்வதும் இல்லை, வைத்துக் கொள்வதும் இல்லை.

ஐக்கிய மக்கள் கூட்டணியாகிய நாம் நாட்டு மக்களின் நலனுக்காக மாத்திரமே செயலாற்றுகிறோம்.”– என்றார்.





# ‘காஸ்’ சின்னம் ஜனாதிபதி ரணிலுக்கு கிடைத்த இறைவனின் ஆசீர்வாதமாம்!

## ஐக்கிய தேசிய கட்சியின் ஆஷுமாரசிங்க கூறுகின்றார்

“சமையல் எரிவாயு வரிசையை முடிவுக்கு கொண்டுவந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னமாக கிடைத்திருப்பது இறைவனின் ஆசிர்வாதமாகும். மக்களின் இதயத்தைத் தொடக்கூடிய இந்த சின்னம், நிச்சயமாக ரணிலை வெற்றிபெறச்செய்யும்.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷுமாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

“நாட்டு மக்கள் சமையல் எரிவாயுக்காக வரிசையில் இருந்த சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்று, எரிவாயு பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக் கொடுத்தார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்த மகத்தான பணிக்கு இறைவனின் ஆசிர்வாதமாகவே அவருக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் தேர்தல் சின்னமாக கிடைத்திருக்கிறது. சமையல் எரிவாயு வரிசையின் நினைவுகளுடன் சிலிண்டர் சின்னத்தை வெற்றிபெறச்செய்ய முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மக்களுக்கு சமையல் எரிவாயு எந்தளவு முக்கியமோ அதேபோன்றே இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முக்கியமாகும். ரணில் இல்லை என்றால் சமையல் எரிவாயு இல்லை. அந்தளவுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் மக்களின் இதயத்தில் இடம் பிடித்திருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க இல்லாமல் இந்த நாட்டை



கட்டியெழுப்ப முடியாது.

எனவே ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்தில் எவ்வாறு சமையல் எரிவாயு வரிசை உள்ளிட்ட ஏனைய வரிசை யுகத்துக்கு தீர்வு கண்டாரோ அதேபோன்று மக்கள் தற்போது எதிர்கொண்டுவரும் பொருளாதார சுமைக்கும் தீர்வுகாண்பார். அதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒருசில வேலைத்திட்டங்கள் தற்போதும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பயனாகவே அஸ்வெசும போன்ற நிவாரண திட்டங்களை வழங்கி வருகிறோம். அதனால் மக்களுக்கு சமையல் எரிவாயு இல்லாமல் முடியாது. அதேபோன்று ரணில் இல்லாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்பதை மக்கள் தேர்தலில் காட்டுவார்கள் என்றார்.



# விசர் நாய்க்கடியினால் 14 மரணங்கள் பதிவு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் விசர் நாய்க்கடி காரணமாக 14 மரணங்கள் பதிவாகியுள்ளன என சமூக சுகாதார விசேட வைத்தியர் அத்துல லியனபதிரன தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வருடம் ஒன்றுக்கு சுமார் 3 லட்சம் பேர்வரை நாய்க்கடிக்கு உள்ளாகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# கொழும்பு ஒருகொடவத்தைப் பகுதியில் போதைப்பொருளுடன் இருவர் கைது!

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒருகொடவத்தைப் பகுதியில் போதைப்பொருள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருகொடவத்தை பகுதியில் வசிக்கும் 35 மற்றும் 53 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில், ஒருவரிடமிருந்து 150 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைபொருளும், மற்றையவரிடமிருந்து 12 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 98,700 ரூபா பணம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# மரமுந்திரிகை செய்கையை விஸ்தரிப்பதற்குத் திட்டம்

வடமேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மரமுந்திரிகை செய்கையை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதுவரை 211 மரமுந்திரிகை கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அந்தக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



# நாடாளுமன்றம் 21 ஆம் திகதி மாத்திரம் கூடும் நாடாளுமன்ற அலுவல்கள் குழுவில் தீர்மானம்

ஓகஸ்ட் மாத இரண்டாம் அமர்வு வாரத்துக்கான நாடாளுமன்ற அமர்வை 21 ஆம் திகதி புதன்கிழமை மாத்திரம் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த வாரம் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அதற்கமைய, ஓகஸ்ட் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மதியம் 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மற்றும் கொழும்பு துறைமுகநகரப்பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தின் கீழ் 2387/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, வர்ள்ட் லய்ப் லய்ன் யோகா நிறுவனம் (கூட்டிணைத்தல்) தனியார் உறுப்பினர் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டிற்காக பிரேரிக்கப்பட்டு சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான இரண்டு வினாக்களுக்கு நேரம் ஒதுக்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மூன்று கிலோ கஞ்சாவுடன் நுணாவிலில் ஒருவர் கைது

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் உள்ள விடுதியொன்றில் இருந்து நேற்றொ வியாழக்கிழமை பிற்பகல் நபர் ஒருவர் மூன்று கிலோ கஞ்சா பொதியுடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்புப் பகுதியைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் நுணாவில் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளையிலேயே இவ்வாறு கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.







# நேர்மையான அரசியல்வாதி சஜித்திடம் இலங்கை நாட்டை ஒப்படைக்கலாம்!

## அதனால் அவரை ஆதரிக்க முடிவெடுத்தோம் என்கிறார் ரிஷாட்

தலைமைத்துவத்தின் தீர்மானத்துக்கு கட்டுப்படுவதற்கு மக்கள் இணங்கியமையாலும், கட்சியின் அரசியல் உயர்பீடத்தில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் 31 வாக்குகள் கிடைத்ததாலுமே, சஜித் பிரேமதாஸவை ஆதரிகக் கட்சி தீர்மானித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு, நேற்று கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் இடம்பெற்றது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் சுபைர்தீனும் கைச்சாத்திட்டனர்.

இங்கு உரையாற்றிய மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தவை வருமாறு:-

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளோம். கட்சியின் உயர்பீடத்தில் இது குறித்து இரகசிய வாக்களிப்பு நடைபெற்றபோது கலந்துகொண்ட 47 பேரில், 31 பேர் சஜித்தை ஆதரித்தனர். நாடு பூராகவும் சென்று மக்களிடம் கருத்துக்கேட்ட போது, கட்சியின் உயர்பீடத்தின் முடிவுக்குக் கட்டுப்படுவார்கள் என அவர்கள் தெரிவித்தனர். இதனால்தான், சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கிறோம்.

இனவாதமில்லாத, வாக்குறுதிகளைக் காப்பாற்றும் நேர்மையான அரசியல்வாதி சஜித். அவருக்கு வழங்கப்படும் சன்மானங்களை மக்களுக்கே அன்பளிக்கும் உயரிய சிந்தனையாளர்.

எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படும் சஜித் பிரேமதாஸ, தனது சொந்தத் தொகுதிக்கு மட்டுமின்றி முழு நாட்டுக்குமே உதவி செய்கிறார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தூர நோக்கோடு செயற்படும் இவர், நானூறு கற்றல் திரைகளை பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளார். பாடசாலைகளுக்கு பஸ்களை அன்பளிப்புச் செய்யும் கலாசாரத்தை சஜித் பிரேமதாஸவே அறிமுகஞ் செய்தார்.

சுகாதாரத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக வைத்தியசாலைகளில் மூச்சு விடும் திட்டத்தையும் இவரே அறிமுகப்படுத்தினார். காலத்தின் தேவைக்கேற்ற புதுப்புது திட்டங்களை செயற்படுத்தும் இவரிடம் நாட்டை ஒப்படைப்பதே சிறந்தது.

ஜனாதிபதியாகத் தெரிவானால், பலஸ்தீனர்களுக்காக ஒரு பிரேரணை கொண்டுவரப்பட வேண்டுமென எமது கட்சி நிபந்தனை விதித்துள்ளது. 1967க்கு முன்னர் பலஸ்தீன் இருந்ததைப் போன்று, பலஸ்தீன் பிரதேசத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதே அதுவாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.







# மகாலட்சுமியை வீட்டுக்கு அழைத்து வழிபட்டு வரம் பெறும் நாள் இன்று!

- ச.சதானந்தசிவம் -

மகாலட்சுமி நம் ஒவ்வொரு வீடுகளிலும் எழுந்தருளி, நாம் செய்யும் பூஜை முறைகளை ஏற்று, நமக்கு ஆசி வழங்கக் கூடிய நாளே வரலட்சுமி விரத நாளாகும். இந்த நாளில் சுமங்கலி பெண்கள் தன்னுடைய கணவரின் நலனுக்காகவும், குடும்பத்தின் சுபிட்சத்துக்காகவும் விரதம் இருந்து, தாலிச்சரடு மாற்றிக் கொண்டு, மகாலட்சுமியை பூஜை செய்து வழிபடுவது வழக்கம். திருமணமாகாத பெண்கள் நல்ல கணவன் அமைய இந்த நாளில் வேண்டிக் கொள்வார்கள்.

இந்த ஆண்டு வரலட்சுமி விரதம், ஆடி கடைசி வெள்ளியுடன் இணைந்த வருகிறது. இந்த நாளில் எந்த நேரத்தில் மகாலட்சுமியை நம்முடைய வீட்டுக்கு, எந்த முறையில் அழைத்து, எப்படி வழிபட வேண்டும், வரலட்சுமி விரதம் பூஜை முறைகள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம். இந்த முறையில் மகாலட்சுமியை வழிபட்டால் அடுத்த ஆண்டு வரலட்சுமி விரதத்துக்குள் குடும்பத்தின் செல்வ நிலை உயர்ந்திருக்கும்.

### வரலட்சுமி விரதம் யாரெல்லாம் இருக்கலாம்?

வரலட்சுமி விரதம் என்பது மகாலட்சுமியை வீட்டுக்கு அழைத்து வழிபட்டு, வேண்டிய வரங்களை பெறுவதற்கு உரிய நாளாகும். வரலட்சுமி விரதத்தையும், வழிபாட்டையும் யார் வேண்டுமானாலும் கடைபிடிக்கலாம். அம்மா வீடு, கணவர் வீடு இரண்டிலும் வரலட்சுமி விரதம் கடைபிடிக்கும் வழக்கம் என்கிறவர்களும், புதிதாக வரலட்சுமி விரதம் கடைபிடிக்க வேண்டும் என நினைப்பவர்களும் இந்த விரதத்தைக் கடைபிடித்து, வழிபாட்டைசட செய்யலாம். அதே போல் முழு உபவாசமாக இருந்துதான் வரலட்சுமி வழிபாட்டைக் கடைபிடிக்க வேண்டும் என எந்த அவசியமும் கிடையாது. உணவு சாப்பிட்டும் வரலட்சுமி நோன்பு வழிபாட்டை மேற்கொள்ளலாம்.

### வரலட்சுமி விரத வழிபாடு

வரலட்சுமி விரத வழிபாட்டை இரண்டு முறையாக கடைப்பிடிக்கலாம் ஒன்று படம் வைத்தும் வழிபடுவது, மற்றொன்று கலசம் வைத்து வழிபடுவது. இந்த ஆண்டு மட்டும் வரலட்சுமி விரதம் கடைபிடிக்க வேண்டும் என நிப்பைவர்கள் படம் வைத்து வழிபடலாம். தொடர்ந்து அனைத்து வருடங்களும் வரலட்சுமி விரதம் இருக்க முடியும் என்கிறவர்கள் கலவசம் வைத்து வழிபடலாம்.

முதல் முறையாக வரலட்சுமி விரதம் இருப்பவர்கள் படம் வைத்து வழிபடலாம். வரலட்சுமி விரதம் என்பது மூன்று நாட்கள் கடைப்பிடிக்க வேண்டிய விரதம் ஆகும். மகாலட்சுமியை வியாழக்கிழமையே அழைத்து, வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூஜை செய்து, சனிக்கிழமை புனர்பூஜை செய்து வழிபடலாம். அப்படி முடியாதவர்கள் வெள்ளிக்கிழமை காலையே அழைத்து, அன்றே பூஜை செய்து, ஞாயிற்றுக்கிழமை புனர்பூஜை செய்தும் வழிபடலாம். படம் மட்டும் வைத்து வழிபடுபவர்கள் வெள்ளிக்கிழமை ஒரு நாள் மட்டும் வழிபட்டால் போதும்.

இந்த ஆண்டு வரலட்சுமி விரதம் இன்று ஓகஸ்ட் 16 ஆம் திகதி, ஆடி மாதத்தின் கடைசி நாளும், ஆடி மாத கடைசி வெள்ளிக்கிழமையும் சேர்ந்துவரும் நாளில் வருகிறது. அன்றைய தினம் பெருமாளுக்கு உரிய ஏகாதசி மற்றும் துவாதசி திதிகள் சேர்ந்த நாளாக வருகிறது. அது மட்டுமல்ல சரஸ்வதி தேவி மற்றும் ஆஞ்சநேயர் அவதரித்த மூல நட்சத்திரத்துடனும், பூராடம் நட்சத்திரத்துடனும் இணைந்து வருகிறது. பூராடம் நட்சத்திரம் பிரகஸ்பதிக்கும், ஈசனுக்கும் உரிய நட்சத்திரமாகும். இதனால் அனைத்து தெய்வங்களின் அருளையும் பெறுவதற்கு ஏற்ற அற்புதமான நாளாக இந்த ஆண்டு வரலட்சுமி நோன்பு அமைகிறது.

படம் வைத்து வழிபடுபவர்கள் மகாலட்சுமியின் படத்தை நன்கு அலங்கரித்து, வீட்டு வாசலுக்கு எடுத்துச் சென்று, மகாலட்சுமிக்கு உரிய மந்திரங்கள் சொல்லி, பூஜைசெய்து வீட்டுக்குள் அழைத்து வந்து வழிபடலாம். கலசம் வைத்து வழிபடுபவர்கள் எவர் சில்வர் தவிர செம்பு, தாமிரம், வெள்ளி, மண் என எவற்றாலும் ஆன கலசத்தை பயன்படுத்தலாம். அதற்கு மஞ்சள் நூல் சுற்றி, முக்கால் பாகம்

தொடர்ச்சி ▼



# மகாலட்சுமியை வீட்டுக்கு அழைத்து வழிபட்டு வரம் பெறும் நாள் இன்று!

தொடர்ச்சி▲

அளவுக்குப் பச்சரிசி அல்லது எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அதோடு மஞ்சள், குங்குமம், எலுமிச்சை, காதோலை, கருகமணி, ஜாதிக்காய், ஏலக்காய், கராம்பு, நாணயங்கள் ஆகியவற்றை போட்டுக் கொள்ளவும். ஒரு தேங்காயை மஞ்சள், சந்தனம் கலந்து பூசி எடுத்து, அதை கலத்தின் வாய் பகுதியில் மாவிலையுடன் சேர்த்து வைக்க வேண்டும். அம்பாளின் முகம் வைத்திருப்பவர்கள் முகம் வைத்து புடைவை, நகைகள், ஜடை ஆகியவை வைத்து அழகாக அலங்கரித்துக் கொள்ளலாம்.

### பூஜை மந்திரம்

அம்பாளாக அலங்கரித்த கலசத்தை வாசலுக்கு எடுத்துச் சென்று, வீட்டில் மூத்த சுமங்கலி பெண்கள் இருந்தால் அவர்கள் ஆரத்தி காட்டி அம்பாளை வீட்டுக்குள் அழைத்து வந்து, ஒரு மனைப் பலகையில் வைக்கலாம். மாக்கோலமிட்டு, மனைப் பலகை இல்லை என்றால் ஒரு தாம்பூலம் அல்லது வாழை இலையில் அரிசி அல்லது நெல் பரப்பி, அதன் மீது இந்த கலசத்தை வைக்கலாம். கிழக்கு அல்லது வடக்கு திசையில் கலசத்தை வைப்பது சிறப்பு. அம்மனுக்கு நைவேத்தியமாக வடை, சுண்டல், பருப்பு பாயசம், சர்க்கரை பொங்கல், வெண் பொங்கல், கொழுக்கட்டை என எது வேண்டுமானாலும் படைக்கலாம். அனைத்து செய்ய முடியாவிட்டாலும் ஏதாவது ஒன்றை எளிமையாக செய்து படைக்கலாம். அன்றைய தினம் அம்பாளுக்குரிய கனகதாரா ஸ்தோத்திரம், லலிதா சகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி ஆகியவற்றை படிக்கலாம்.

### வரலட்சுமி விரத வழிபாட்டு முறை

வாழைப்பழம், வெற்றிலை பாக்கு வைத்து, தாமரை மலர்கள் கிடைத்தால் வைக்கலாம் இல்லாவிட்டால் மல்லிகைப்பூ பயன்படுத்தலாம். அர்ச்சனைக்குத் துளசி, வில்வம், அருகு ஆகியவை பயன்படுத்துவது சிறப்பு. முடியாதவர்கள் சாதாரண மலர்கள், குங்குமம், அக்ஷதை என எந்த பொருள் முடிகிறதோ அதைக் கொண்டு அம்பிக்கைக்கு உரிய நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்து வழிபடலாம். அதோடு நோம்பு சரடினையும் இரண்டு பூ வைத்து கட்டி அம்மனின் பாதத்தில் வைத்து, பூஜை செய்ய வேண்டும். இந்த வழிபாடுகள் அனைத்தையும் வெள்ளிக்கிழமை காலை 10.20 மணிக்குள்ளாக முடித்து அம்மனுக்கு ஆரத்தி காட்டி, பூஜையை நிறைவு செய்ய வேண்டும். தாலிச்சரடு மாற்றிக் கொள்பவர்களும் இந்த நேரத்துக்குள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

### புனர்பூஜை செய்யும் முறை

சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை புனர்பூஜை செய்பவர்கள் பூஜை அறையில் உள்ள கலசத்தை எடுத்துச் சென்று, சமையலறையில் வைத்திருக்கும் அரிசி பாத்திரத்துக்குள் வைத்து விடுங்கள். “எங்கள் வீட்டில் நீ எப்போதும் நிரந்தமாக வாசம் செய்ய வேண்டும். வீட்டில் எப்போதும் உன்னுடைய அருளும், குறைவில்லாத செல்வமும் இருக்க வேண்டும்” என வேண்டிக் கொண்ட பிறகு, மேலே இருக்கும் தேங்காயை எடுத்து ஏதாவது இனிப்பு செய்வதற்கு பயன்படுத்தலாம். உள்ளே இருக்கும் நாணத்தை வீட்டில் பணம் வைக்கும் இடத்தில் வைத்து விடலாம். எலுமிச்சை, மாவிலை, காதோல கருகமணி ஆகியவற்றை பூஜையறை குப்பையில் சேர்த்து விடலாம். கலசத்தில் வைத்த வாசனை பொருள்களை சமைலுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அரிசியில் சர்க்கரைப் பொங்கல் வைத்து சாப்பிடலாம்.

# கோணேஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத்தைக் குழப்பி சிங்கள - பௌத்தமயமாக்க கிழக்கு ஆளுநர் முயற்சி

## கஜேந்திரன் எம்.பி. சரமாரிக் குற்றச்சாட்டு



**(கே.வசந்தன்)**

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை சிங்கள – பௌத்தமயமாக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவாக கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானும் இணைந்து செயற்படுகின்றார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருக்கோணேஸ்வரர் ஆலய விவகாரம் தொடர்பில் நேற்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருக்கோணேஸ்வரம் என்பது சைவ மக்களுடைய வரலாற்றுத் தொன்மை மிக்க ஒரு அடையாளம். தமிழர்களின் பழமையான வரலாற்றை பறை சாற்றும் அடையாளமாக விளங்குகின்றது. அந்த ஆலயத்தை முழுமையாக கையகப்படுத்தி சிங்கள – பௌத்த அடையாளமாக மாற்ற வேண்டும் எனப் பேரினவாதிகள் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகின்றனர். திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரும், அதன் மக்களும் அதற்கு எதிராகக் கடுமையதாக போராடி வருகிறார்கள். இவ்வாறான நிலையில் அந்த ஆலய நிர்வாக சபைக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி, ஆலய நிர்வாக சபை மீது சேறுபூசி, அந்த நிர்வாக சபையை அகற்றி விட்டு, ஓர் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கான சதி முயற்சிகள் நடைபொறுகின்றன.

அண்மைக் காலத்தில் அந்த ஆலய நிர்வாகத்தில் திருட்டுச் சம்பவங்கள், முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனக்காட்டி அவை பூதாகரமாகபப்டுத்தப்பட்டுள்ளன. ஆலய பக்தர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும் முகமாகப் பரப்புரைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆளுநருடைய அலுவலகத்தால் இவ்வாறான செய்திகளைப் பரப்பி, அவதூறைகளை ஏற்படுத்தி, ஆலய நிர்வாகத்தினருக்கு நெருக்கடியைக் கொடுத்து, அவர்கள் தாமாகவே அதில் இருந்து விலகிச் செல்கின்ற அல்லது பொது மக்களைத் தூண்டி அவர்களை அகற்றிவிட்டு அதனை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை ஆளுநர் அலுவலம் செய்து கொண்டிருக்கின்றது. மிக நீண்ட காலமாக நிர்வாக சபை கட்டுக்கோப்புடன் செயற்பட்ட நிலையில், அதனைக் குழப்பி, அதற்குள் நுழைய அரச தரப்பு தீவிரமாக முயல்கிறது. அந்த முயற்சியின் ஒரு கருவியாக ஆளுநர் செந்தில் தொண்டமான் இருக்கின்றமை மிகவும் கவலைக்குரிய விடயம்.

இந்த நிர்வாக சபையை கலைத்து புதிய இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த ஆளுநர் எடுக்கும் முயற்சிகளை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இடைக்கால நிர்வாகத்தில் தன்னையும் ஓர் அங்கத்தவராக இணைக்க வேண்டும் என அவர் அழுதங்களைப் பிரயோகிக்கின்றார் என ஆலய நிர்வாகத்தாலும், வழிபாட்டு சபையாலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆலய நிர்வாகத்திற்கு தெரியாது, பாதுகாப்பு விதிமுறைகளுக்கு முரணாக ஆளுநர் அலுவலகத்தால் கூட்டம் கூட்டப்பட்டு, அது குழப்பத்தில் முடிவடைந்தது.

திருகோணேஸ்வரர் ஆலயத்தை கையகப்படுத்துவதற்கும், அதனை சீரழிப்பதற்கும் ஆளுநர் முன்னெடுக்கும் முயற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். அரசாங்கத்தின் முகவராகவும், அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் இருந்து கொண்டு அவர் நிர்வாகத்தில் நுழைவதை ஏற்க முடியாது. சட்ட விரோதமாக அமைக்கப்படும் விகாரைகளை தடுத்து நிறுத்தி, தமிழ் மக்களின் இருப்பை காப்பாற்ற முதுகெலும்பு அற்ற ஆளுநர் ஆலயத்தை தாரை வார்க்க எடுக்கும் முயற்சிகளை ஏற்க முடியாது. ஆளுநர் அங்கு இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் கூறும் கருத்துக்கள் கூட அடிப்படையற்ற கருத்துக்கள். அது தொடர்பில் உண்மையான விசாரணை தேவை. தொல்பொருர் திணைக்களத்தை வலிந்து இழுக்கும் செயற்பாட்டை ஆளுநர் செய்யக் கூடாது. – எனத் தெரிவித்தார்.

# ஜனக்கவிடம் மூன்று கோடி ரூபா லஞ்சம் பெற்ற கட்சித் தலைவரும் செயலரும் விளக்கமறியலில்




ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனக ரத்நாயக்கவை பெயரிட 3 கோடி ரூபா லஞ்சம் பெற்றமைக்காக கைதானவர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது அந்த கட்சியின் தலைவர் மற்றும் செயலாளரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மேலும் ஆறு சந்தேக நபர்களையும் தலா 20 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



Vijaya Jewellery's
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
WOW! WING
MARKETING PARTNER
Print Fast
PROUDLY PRESENTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
east FM 102.7 தமிழ்
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest

Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

# இன்றைய ராசி பலன்கள் - 16.08.2024




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை பெற்றுத் தரும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக்கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவினர்களிடம் கலந்தாலோசித்து உங்கள் திருமணத்துக்காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.

பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் செயல்களை சீராக மேற்கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.




வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் சராசரிக்கும் அதிகமான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்துவீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம்படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிபபடையக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். தூக்கமின்மை பாதிப்பு அல்லது தோல் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.08.2024




எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப் பீர்கள்.




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடு பாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல் பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப் பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங் களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக் காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர் பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப் படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் கவலை அளிக்கும்.





